உ
சிவமயம்



# அமரர்
# தம்பு திரவியம்

அவர்களின் பிரிவுத்துயர் குறித்த

# நினைவு மலர்

16.02.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# தம்பு திரவியம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து
வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

16.02.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது இல்லத் தலைவனாய் மிளிர்ந்து

அன்பால் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை

அரவணைத்து உற்றார் உறவினருடன்

இணங்கி அவர்களோடு இயைந்து வாழ்ந்து

இன்று எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த எம்

அன்புத் தெய்வத்திற்கு இம்மலரைக்

காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"நெருநல் உளனொருவன் இன்று இல்லை என்னும்
வெருமை உடைத்து இவ் உலகு"



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 . 01 . 1952 | 03 . 01 . 2022 |

# அமரர் தம்பு திரவியம்

அவர்களின்

## திதி வெண்பா

ஆண்டு பிலவ அமைந்த மார்கழியில்
பூண்ட பூர்வ பக்கப் பிரதமையில் - நீடுலகில்
வாழ்ந்த திரவியம் சிவன் தாள் அடைந்தார்
ஆழ்ந்தமைதி காண் அறிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## பிள்ளையார் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
    தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
    மாண்பினர் காண் பல வேடர்
நோயினும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
    நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
    கோணமாமலையமர்ந்தாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

யானும் பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனை வந்துறுமாறே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக்கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்புமறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன்னடியின் கீழ் இருக்கவென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொடவல் பொரி
　　கப்பிய கரிமுக னடிபேணி
கற்றிடுமடியவர் புத்தியிலுறைபவர்
　　கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திரு மரண்மகன்
　　மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
　　மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழடைவினை முற்படு கிரிதனில்
　　முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரி செய்த அச்சிவனுறை ரதம்
　　அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரமணி படும்
　　அப்புன மதனிடை கிபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
　　அக்கண மணமருள் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தம்பு திரவியம் அவர்களின் வாழ்க்கைச்சரிதம்

இயற்கை எழில் கொஞ்சும்
ஈழமணித் திருநாட்டின்
இந்திரலோகமாய் மிளிரும் முள்ளியவளைக்கிராமத்தில்
இகம் போற்ற வாழ்ந்த தம்பு அம்மாக்குட்டி தம்பதியினர்
செய்த நல் தவத்தின் பேறாய்
பெருமை விளங்க மக்களைப் பெற்று
மகத்துவமான வாழக்கை வாழ்ந்ததன் பயனாய்
பெருஞ்சிறப்பு விளங்க செல்லத்துரையையும், புலேந்திரன்
இராஜதுரையுடன் கந்தசாமி ஈஸ்வரபாதம்,திரவியம்,
சுந்தரலிங்கம் எனும் ஆண் மக்களோடு
இறையருள் பெற்ற பரமேஸ்வரி, இரத்தினம்மா எனும்
பெண் மக்களையும் பெற்று
பெருமிதமாய் வாழ்ந்து வரும் வேளை
பொருளாதாரத்தை வளர்க்கும் நோக்குடன்
பொருத்தமான வயல் புலம் நிறைந்த
ஒட்டி சுட்டான் புளியங்குளத்தை சென்றடைந்து
தான் தோன்றியீஸ்வரனின் அருளாட்சி ஓங்கும் அவ்விடத்தில்
தம் துணையாக அவரைப்பற்றி
வளமான வாழ்வை வாழத் தொடங்கிய போது
எட்டாவது மகனாம் திரவியத்தை
ஏற்ற முற வளர்த்துமே நின்றவேளை
தித்திக்கும் திரவியமாய் பேருக்கு அணி செய்த மகனை
திருமிகு ஆசிரிய சேவை புரிந்த நடராசா முத்துமணி தம்பதியரின்
ஏக புத்திரியாம் உதயலோஜினிக்கு
அகமிகமகிழ்ந்து மணம் முடித்து வைத்ததன் பயனாய்
நீடு புகழ் கொண்ட மைந்தனாம் நிவேந்தனையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கா அன்பு கொண்ட மகளாம் தாரணியையும்
பெற்றெடுத்து மகிழ்ந்துமே நின்றனர்.
மூத்த மகனை விவேகானந்தன் சரஸ்வதி தம்பதியினரின்
மகள் வாரணிக்கு மணம் முடித்து,
பரணிகா, அஸ்விதன் என்ற பேரமழலைகளை
மடியிலேந்தி மகிழ்ந்துமே நின்றார்.
செல்ல மகளை பரம்சோதி புவனேஸ்வரி தம்பதியினரின்
செல்வ மகன் வசந்தரூபனுக்கு மணம் முடித்து வைத்துமே
கபினேகா, வருணிகா, தரங்கினி, என்ற பேர மழலைகளை
கையிலேந்தி அகமிகமகிழ்ந்துமே நின்றார். இந்நிலையில்
வாழ்க்கையின் வசந்தத்தை முழுமையாய்க்காண
காலதேவனுக்கு பொறுக்க வில்லையோ? ஐயகோ!
உங்களை எம்மிடமிருந்து பிரித்து விட்டானே.
மனம் மிகக் கலங்கி நின் ஆத்மா சாந்தி பெற
தான் தோன்றியீஸ்வரனின் பாதங்களை
தாழ்மையோடு இறைஞ்சி நிற்கின்றோம்.

## தேற்றம்

பிறந்தவர் இறத்தல் திண்ணம்
பேசிடும் பகவத்கீதை
இறந்தவர் பிறத்தல் திண்ணம்
இதையுமே சொன்னான் கண்ணன்
சென்றது இனி மீளாது
துக்கம் விடுக! அறம் வளர்க்க
நின்றமைதி காண்க! நிதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பிள்ளையார் கதை



**சிறப்புப் பாயிரம்**

செந்தமிழ் முனிவன் செப்பிய காதையுங்
கந்த புராணக் கதையிலுள் ளதுவும்
இலிங்க புராணத் திருந்தநற் கதையும்
உபதேச காண்டத் துரைத்தநற் கதையுந்
தேர்ந்தெடுத் தொன்றாய்த் திரட்டியைங் கரற்கு
வாய்ந்த நல்விரத மான்மிய முரைத்தான்
கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்குந்
துன்னிய வளவயற் சுன்னாகத்தோன்
அரங்க நாதனளித்தருள் புதல்வன்
திரம்பெறு முருகனைத் தினந்தொறும்
வரம்பெற வணங்கும் வரதபண்டிதனே.

**காப்பு**

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன் மேலருந்திக்
குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியேயிக் கதைக்குக் காப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளங்கு மான்மருகா சேவல் தனிலேறி
வரமரன்றா னீன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

**விநாயகர் துதி**

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தோனைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

ஒற்றையணி மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன் மனத்தில் எப்பொழுதும்
கொண்டக்கால் வராது கூற்று.

பாலுந்தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங்கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக்கரிமுகத்து தூமணியே நீயெனுக்கு
சங்கத்தமிழ் மூன்றும் தா.

**சப்பாணி**

எள்ளு பொரிதேன் அவல் அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக்கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்
வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி அருள்க சப்பாணி.
சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரஸ்வதி துதி**

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவி
முத்தின் குடை உடையாளே மூவுலகுந் தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல் இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்து என்
சித்தம் தனில் நீ இருந்து திருவருள் செய்திடுவாயே.

**அதிகாரம்**

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னத்திற் பிறவில் அரில்தபத் திரட்டித்
தொன்னெறி விளக்கச் சொல்லுவன் கதையே.

**நூல்**

மந்தர கிரியில் வடபால் ஆங்கு ஓர்
இந்துவளர் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியும்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமும் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருக எனப் பொருப்பு அரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளின்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவனடி வணங்கிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவற்கு அருள்புரிந்து அருளென
அந்த அந்தணனுக்கு இந்த நற்பிறப்பில்
மைந்தரில்லை என்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரி சாயினும் எம்பொருட்டு ஒரு சுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்கென
எமையாளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்

பேதாய் நீ போய்ப் பிறவென மொழிய
மாதுஉமை யவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடு மானுடைப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் தலவற்கு நீ பிள்ளை யாகச்
சென்று அவன் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல் செய்தருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கன் மாமகளும்
பெடைம யிற்சாயற் பெண்மக வாகித்

தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்றில் உதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பின ளாகி
ஐயாண்டு அடைந்த பின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாள்நுதல் தன்னை
மானுட மறையோற்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவன் தன்னை உன் மணமகனாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யானெனக்
கருந்தட நெடுங்கண் கவுரி அங்கு உரைத்து
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல் தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல் உமை அருந்தவம் பயில
அரிவை தன் அருந்தவம் அறிவோம் யாமென
இருவரும் அறியா இமையவர் பெருமான்

மான் இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறைவன் ஆகிக்
குடையொடு தண்டு நற்குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையில்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறும் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லியலாய் நீ
என்பெறத் தவமிங்கு இயற்றுவது என்றலும்
கொன்றை வார்சடையனைக் கூட என்று உரைத்தலும்
நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்

மாட்டினில் ஏறி மான் மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சை கொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சி நீ செய்தவம் நகைதரும் உமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கு அவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர் குழலியை
வாடுதல் ஒழிகென மனமிகத் தேற்றிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துர வாள்நுதற் சேடியர் தாம்போய்த்
தந்தை தாயிருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினான் என்றலும்
தோடு அலர்கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்க என
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்து அருள் என
மைம்மலர்க் குழலி வந்து எனை அழைக்கில்
அம்மனைப் புகுவன் என்று அந்தணன் உரைத்தலும்

பொற்றொடி நீ போய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கெனச்
சிவனை இகழ்ந்த சிற்றறிவுடையோன்
அவனையான் சென்றிங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறினள் ஆகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லதென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான் வெளிப்படுவது இல்லையென்று இசைப்ப

மலையிடை வந்த மாமுனி தன்னை இணையடி
தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய் சொல்மறுத்தல் பாவமென்று அஞ்சி
ஆயிழை தானும் அவனெதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன் என்றெண்ணி

ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப் பாத
பூசனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன் கதலிப்பழம் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்து இவை கொடுத்துத்
தக்கோலத்தொடு சாதிக் காயும்
கற்பூரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்

ஒள்ளிய தட்டில் உகந்து முன்வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமாமுனி புன்முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவும் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்

கரந்ததன் உருவங் காட்டி முன்நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடு அங்கு அவன் அடி வீழ்ந்து இறைஞ்சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகை கந்தர்வர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில் உள்ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்

மன்றல் அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல் வந்துஇலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக்கத்தால் வளை பல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில் விதானித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறும் திருவிளக்கேற்றிப்

பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரானையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடலென விளங்கும் காவணந் தன்னில்

சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்து உடன் இருத்திப்
பறையொலியோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவை தன்னுடனே

ஓதநீர் வேலிசூழ் உஞ்சையம் பதிபுக
ஏரார் வழியில் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீ என
வருங்கருங் குழலாள் மற்றும் உண்டோ எனத்
திருந்து இழை மடந்தை திரும்பினாள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்து விளையாடல் கண்டு
ஒளிர்மணிப்பூணாள் உரவோடு உடனே
இவ் வகையாய் விளையாடுவோம் இங்கென
அவ்வகை அரனும் அதற்கு உடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக

மதர்விழி உமைபிடி வடிவம் அதாகிக்
கூடிய கலவியில் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்வி வேத ஆகமம் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக்கையோடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந் துவர்வாயும்

தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டும்
கோடி சூரியர் போற் குலவிடு மேனியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலும்
கற்றைச் சடையுங் கனக நீண்முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்து அவதரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்த நான் முகனும்

மண்ணு ளோர்களும் வந்து உனை வணங்க
ஆங்கு அவர் தங்கட்கு அருள் சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதுஇரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்து இனிது இருந்த பின்
வான வராலும் மானு டராலும்

கானமர் கொடிய கடு விலங்காலும்
கருவிகளாலுங் காலனாலும்
ஒரு வகையாலும் உயிரழியாமல்
திரம்பெற மாதவஞ் செய்து முன்னாளில்
வரம் பெறுகின்ற வலிமை யினாலே
ஐம்முகச் சீயம் ஒத்து அடற்படை சூழக்
கைம்முகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமை கண்டு ஏங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனோடு அவன் தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்று வா என்று விடை கொடுத்தருள
ஆங்கு அவன் தன்னோடு அமர்பல உடற்றிப்

பாங்குறும் அவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை ஒடித்து அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்த மூடிகமாய் வந்து அவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்த வெண்மருப்பு அங்கு இமைநொடி அளவில்

செறிந்தது மற்று அவன் திருக் கரத்தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனை என மணந்தே
ஓகையோடு எழுந்து ஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும் வழி தன்னிற்
கருச்சங் கோட்டிக் கயல் கமுகு ஏறும்
திருச்செங் காட்டிற் சிவனை அர்ச்சித்துக்
கணபதீச் சுரம் எனுங் காரண நாமம்
கணபதி புகழ்தரு பதிக்கு உண்டாக்கிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமை பெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர்
யாவரும் வந்து இவன் ஏவல் செய்திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென்று என்றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் எண்ணிய பெறுநாள்
ஒப்பரும் விரதத்து உறும் ஒரு சதுர்த்தியில்
நோற்று நற்பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றி செய்திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்த காத்திரமும்
தாழ்துளைக் கையும் தழைமுறச் செவியும்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளும்
கொண்டனன் சீற்றம் குபேரனை நோக்கி
என்னைக் கண்டு இங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத்தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும் எய்துவர் என்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள் இத் தினத்திற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கண் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்

இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்.
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகை இனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத்து உதித்த
தருமனும் இளைய தம்பி மார்களும்
தேவகி மைந்தன் திருமுக நோக்கி
எண்ணிய விரதம் இடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண் டாகவுஞ்
செருவினில் எதிர்ந்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்

எந்தத் தெய்வம் எவ்விரதத்தை வந்தனை
செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீர் எனக் கிளர்த்த லுற்றான்
அக்கு நீறணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்கும்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்

சர்வா பரணமுந் தரிக்கப் பெற்றவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையில் தந்தம் ஒருகையிற் பாசம்
ஒருகையின் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறு நினைவின்படி
சித்தி செய்வதனாற் சித்தி விநாயகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இமையவரும் யாவருந் துதிப்ப
நன்றி தரும் திருநாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதும்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்

வித்தி யாரம்பம் விரும்பிடும் போதும்
உத்தி யோகங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கவன் தன்னை அருச்சனை புரிந்தாற்
தீங்கு உறாது எல்லாஞ் செயம் உண்டாகும்
கரதலம் ஐந்துக் கணபதிக்கு உரிய
விரதமொன்று உளதை விரும்பி நோற்றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தமையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு

நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசை செய்விதமும்
விரித்தெமக்கு உரைத்திட வேண்டுமென்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறை நீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பத்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்

வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன் தன்
ஒள்ளிய அருள் திரு உருவுண்டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலுந் தகுமால்
பூசனஞ் செயுமிடம் புனித மாக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகம் கோசிகம் கொடி விதானித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகர் உருவைச்
சிந்தையில் நினைந்து தியானம் பண்ணி

ஆவா கனம் முதல் அர்க்கிய பாத்தியம்
வாகார் ஆச மனம் வரை கொடுத்து
ஐந்து அமிர்தத்தால் அபிடேகித்துக்
கந்தம் சாத்திக் கணேச மந்திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும் மந்திரத்தால்
மாசு அகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்து உமை சுதனாப் புகலு மந்திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகுடன் இருபத்தொரு விதமாய்
பத்திர புஸ்பம் பலபல கொணர்ந்தே

உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்தன் ஈசுர புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வ காரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும் நாமங்களால்
ஆரம்பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற் பணிகாரம்
தீது அகல் மாங்கனி தீங்கதலிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு

தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும் முன்வைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரப்பிரியன் என்று உரைக்கும் மந்திரத்தால்
நிருந்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்ற நானான்கு உபசாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண் அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுருவத்தைத்
தரித்த வத்திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித்திகம் என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர் செய்தலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன் இவன் தன்னை முன் அர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்று கொன்றிட்டான்
அகலிகை இவன்தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாள் தமயந்தி
அன்னான் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்தி இவன் இவனை
மதிதலந் தன்னின் மலர்கொடு அர்ச்சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்ட தேவதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்மணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபாலன் தான்
கொண்டு போம் அளவிற் குஞ்சர முகனை
வண்டு பாண்மிழற்றா மலர்கொடு அர்ச்சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்

புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணிலர் உளரால்
அப்படி நீவிரும் அவனை அர்ச்சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்று கன்றெரிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்து கட்புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்சிந்தையில்
நினைத்தவை செகத்தினிற் செயங்கொண்டு

அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்.
ஈங்கு இது நிற்க இவ்விரதத்து இயல்
ஓங்கிய காதை மற்றொன்று உரை செய்வாம்
கஞ்சநான் முகன் தரும் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயை தன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறி நடத்துதலால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீ இரங்கு எமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்
என அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமரவேல் விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்

ஓடிய வானோர் ஒருங்குடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர் அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள் என்றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக்கு ஏதென
உற்றிடுங் கரத்தலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்

தானும் அச் சபையில் தரியாது ஏகி
எமை ஆளுடைய உமையாளுடனே
அமையா இன்பத்து அமர்ந்து இனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கி நாணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை அவன் கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்று கையேந்திப்
போத நீள் வாயுவும் பொறுக்க ஒண்ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையில் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண் ஆறு இரண்டும் கரம் ஈராறும்
தூண் எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண் அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்ந்து உடன்கூடி
அறுமீன் களைப்பால் அளித்தீர் என்று அனுப்ப
ஆங்கவர் முலையுண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடும் நாளில்
விமலனும் உமையும் விடையுகைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல் உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்து எடுத்து அணைத்துத்
தேவர் தம்படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய் நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடு என்றனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுபேர் பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு

அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்து இனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்து அடி வணங்கி
மருமலர்க் கடம்பன் எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும் நீ அம்பிகா பதியென

இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்தி முன்னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீ தான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்

புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காண அங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ் உமையாள் வென்றேன் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானும் யான்வென்றேன் என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவருஞ் சாட்சியம் இவனைக் கேட்ப

மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரி அங்கு உருத்து
நோக்கி நீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையினாலே

கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள் வீற்றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்த்
துளவு அணி மருமனுந் துணை விழியிழந்தே
ஆண்டு அரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல் வீற்றிருக்கும்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்

திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத்தின் கீழ் இருந்தான்
கம்ப மாமுகத்துக் கடவுள் தன் பெருமையை
அம்பு வியோருக்கு அறிவிப்போம் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பர் உலகத்து ஓர் எழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகைக் கழிந்த பின்னாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி

இருபத்தோர் இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டு ஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதி விநாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றெழுத்து அதனால் மொழிந்த மந்திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசாரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றை நாள் ஐங்கர மாமுகன் பிறந்த

அற்றைநாள் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும் அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வதிபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடு விதானித்து
உலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற்கு கற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிக்

செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருத்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ் இரு வாட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை முல்லை தழையவில் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்பு செவ்வந்தி
வாய்ந்த நல்எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்

தூப தீபங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல் எள்ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்முழுக் கரும்பு
தேனுடன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும் நோற்பேன் என

ஆங்கு அவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடு இவ்விரதம் பரிந்து நோற்பித்தார்
அண்டர் நாயகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந்து உமையொடு
விமலன் கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாபம் நீங்கியது ஏதென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப

இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளை அன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தந்தருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுஉமை அடைந்த வன்தாழ் நீக்கி

நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
தானோ வந்தது நகையானது எனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ் சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருத்தி நோற்பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்

குறமட மகளைக் குலமணம் புரிந்தோன்.
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டு உழுந்தாமத் தாமனை
மாதுமை யாளை வந்து கண்டனனே
கண்ண நீ கண்ணிலாக் கட்செவி ஆகுஎனக்
தண்நறுங் குழலுமை சாபமிட்டதுவும்
அக்கு நீறணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயகன் விரதம் நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டு நீங்கியதும்,

பவுரிகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரி அன்று அடைத்த கபாடந் திறந்ததும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்,
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்,
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விரதத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்த்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து

தடமுலைத் திலோத்தமை தனைமணம் புரிந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடு இவ்விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ர மாதித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதல் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்த அன்புடன் இவ் விரதம் நோற்பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்

சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கு அது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச் சிறையிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழையது கிடப்பக் கண்டு அவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதை கைக்கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவட்கு அருள
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிர மாதித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிரமான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புத் தாளினின்று ஒலிப்பக்

கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு

இமைப்பொழுது இவள் இங்கு இருக்கலாகாது என
அயற் கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலிய கல்லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர் தம்மனையில் உற்று அவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயக்கலம் உடைந்து கொள்ளை போக

அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய்து ஆக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகளெல்லாந் துணிந்து வேறாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் "பாவிநீ தான்யார்?" என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்

அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குத்தினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டும் தன் அகம் அதிற்சென்று
இவ்வகைக் கன்னி நீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லும் விக்கிரம சூரியன் மனையெனச்

சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம் மெழுகிடுக எனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் புழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரை மெழுக்கிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்தி நின்றாட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தக எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்து முன்அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
துவலரும் விநாயக நோன்பு நோற்றிடுக எனக்
கரத்து மூஏழு இழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம் பல பண்டமுஞ்
செப்ப மதாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகா விரதத்தை
வித்தகமாக வியங்கு இழை நோற்றுக்
கற்பக நம்பி கருணை பெற்றதன் பின்,
சக்கர வாள சைனியத்தோடு
விக்ர மாதித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருள்எனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்நீர்க் கரகமும் ஒரு பணிகாரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்

அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தான்அது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்த நீ யாரென வினவ
அவ்வல் அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண் இது
குணமுடை இவள் உன் குலமனையாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மங்கையை நோக்கி மனம்மிக மகிழ்ந்து

திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்று அடி பணியச்
சுந்தரி இருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன் மேலருந்திக்
குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியேயிக் கதைக்குக் காப்பு.
திருவிளங்கு மான்மருகா சேவல் தனிலேறி
வருமரன்றா னீன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னனும் நவமணியும் வந்து அணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்தது.

பொற்பணைக்கை முக்கண்புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்று எடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோராது அருகு இருந்து
கேட்டோர்க்கும் வராது கேடு.

சூலிலார் நோற்கி சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்பு எல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பிள்ளையார் கதை முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன்துணை

# கந்த சஷ்டி கவசம்



## காப்பு
## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செய்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மைய னடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வே ல்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ சணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருடன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொங்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவநீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணை வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரஹ வழிபாடு

ஒவ்வொருவரின் வாழ்விலும் இன்பமும், துன்பமும் உடலுக்கு நோயும் உள்ளத்திற்கு கவலையும் மாறி மாறி வந்த வண்ணம் இருக்கின்றன. இதற்குக் காரணம் இறைவனின் ஒன்பது அம்சமான நவக்கிரகங்களே ஆகும். கிரகதோசம் என்பதன் பொருள் இதுவே ஆகும். நவக்கிரக தோஷங்களிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு வாரத்தின் ஏழு நாட்களுமே நவக்கிரகங்களை காலை அல்லது மாலை ஒன்பது முறை சுற்றி வர வேண்டும். ஒவ்வொரு முறை சுற்றி வரும் பொழுதும் நவக்கிரகங்களின் ஸ்தோத்திரங்களைக் கூறிக் கொண்டு வழிபடுவதால் அனைத்து இன்னல்களும் நீங்கி நன்மை உண்டாகும்.

**நவக்கிரக வழிபாடு ஸ்தோத்திரம்**

*1. சூரியன்*

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்!

பலன்: வீட்டில் செல்வம் பெருகும்.

**நவக்கிரகங்களின் பெருமை**

*1. சூரியன்*

காசியப்ப முனிவரின் குமாரர், ஒளிப்பிழம்பானவர். நவக் கிரகங்களில் முதன்மை ஸ்தானம் பெற்றவர். சிம்ம ராசிக்கு அதிபதி, நவக்கிரகங்களில் நடுவில் அமர்ந்திருப்பவர்.

| | | |
|---|---|---|
| அதிதேவதை | - | அக்னி |
| பிரத்யதிதேவதை | - | ருத்திரன் |
| தலம் | - | சூரியனார் கோயில் |
| நிறம் | - | சிவப்பு |
| வாகனம் | - | ஏழுகுதிரைகள் பூட்டிய ரதம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தான்யம் | - | கோதுமை |
| மலர் | - | செந்தாமரை அரக்கு |
| வஸ்திரம் | - | சிவப்பு |
| ரத்தினம் | - | மாணிக்கம் |
| அன்னம் | - | கோதுமை, ரவா, சர்க்கரைப் பொங்கல் |

*2. சந்திரன்*

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

பலன் : நோயற்ற வாழ்வு பெருகும், எல்லா நலன்களும் பெருகும்.

சந்திரன்

பாற்கடலில் தோன்றியவர், தண்ணொளியுடையவர், கடக ராசிக்கு அதிபதி.

| | | |
|---|---|---|
| திக்கு | - | தென்கிழக்கு |
| அதிதேவதை | - | ஜலம் |
| பிரத்யதிதேவதை | - | கௌரி |
| தலம் | - | திருப்பதி |
| நிறம் | - | வெள்ளை |
| வாகனம் | - | வெள்ளைக்குதிரை |
| தான்யம் | - | நெல் |
| மலர் | - | வெள்ளை அரளி |
| வஸ்திரம் | - | வெள்ளாடை |
| ரத்தினம் | - | முத்து |
| அன்னம் | - | தயிர்சாதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*3.செவ்வாய்*

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடி போற்றி
அங்கார ரகனே அவதிகள் நீக்கு.

பலன் : எல்லோராலும் வேண்டப்படும் சந்தோஷம் பெருகும்!

*3.அங்காரன்*

இவர் வீரபத்திரர் அம்சம், தெய்வம் சுப்ரமண்பர், பாவ பலனைக் கொடுக்கும் குரூரர், மேடம் - விருச்சிக ராசிகளுக்கு அதிபதி

| | | |
|---|---|---|
| திக்கு | - | தெற்கு |
| அதிதேவதை | - | நிலமகள் |
| பிரயதிதேவதை | - | ஷேத்ர பாலகர் |
| தலம் | - | வைத்தீஸ்வரன் கோயில் |
| நிறம் | - | சிவப்பு |
| வாகனம் | - | ஆட்டுக்கடா |
| தான்யம் | - | துவரை |
| மலர் | - | செண்பகப்பு, சிவப்பு, அரளி |
| வஸ்திரம் | - | சிவப்பு ஆடை |
| ரத்தினம் | - | பவளம் |
| அன்னம் | - | துவரம்பருப்புப் பொடி சாதம் |

*4.புதன்*

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந்த தருள்வாய் பண்ணொலி யானே
உதவியே யாளும் உத்தமா போற்றி!

பலன்: நல்லவற்றையே பேசி நல்லறிவு பெருகும்.

இவர் சந்திரனுடைய குமாரர், தீய கிரகங்கள் விளைவிக்கும் பீடைகளை அழிக்கும் ஆற்றல் உடையவர். மிதுனம், கன்னிராசி களுக்கு அதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திக்கு | - | வடகிழக்கு |
| அதிதேவதை | - | விஷ்ணு |
| பிரத்யதிதேவதை | - | நாராயணன் |
| தலம் | - | மதுரை |
| நிறம் | - | வெளித் பச்சை |
| வாகனம் | - | குதிரை |
| தான்யம் | - | பச்சைப்பயறு |
| மலர் | - | வெண்காந்தள் |
| வஸ்திரம் | - | வெண்ணிற ஆடை |
| ரத்தினம் | - | மரகதம் |
| அன்னம் | - | பாசிப்பருப்பு பொடி சாதம் |

5. குரு - *வியாழன்*

குணமிகு வியாழக்குருபகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன ருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோஷமின்றி கடாட்சித் தருள்வாய்.!

பலன் - செல்வம் பெருகும் துன்பங்கள் மறையும்.

குரு

ஆங்கிரஸ் மகரிசிக்கும் சிரத்தாதேவிக்கும் மகனாகப் பிறந்தவர்

| | | |
|---|---|---|
| திக்கு | - | கிழக்கு |
| அதிதேவதை | - | பிரமன் |
| பிரத்யதிதேவதை | - | இந்திரன் |
| தலம் | - | திருச்செந்தூர் |
| நிறம் | - | மஞ்சள் |
| வாகனம் | - | மீனம் |
| தான்யம் | - | கடலை |
| வஸ்திரம் | - | மஞ்சள் நிற ஆடை |
| ரத்தினம் | - | புஸ்பராகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம் - கடலைப்பொடி சாதம், சுண்டல்

*6.சுக்கிரன் - வெள்ளி*

சுக்கிர மூர்த்தி சுபசுக மீவாய்
வக்கிரமின்றி வரமிகுத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே!

பலன் : எல்லா நன்மைகளும் பெருகி, நவக்கிரகங்களின் அருளைப் பெறலாம்.

*6.சுக்கிரன்*

இவர் ~~அரசு~~, குரு, இவரை மழைக்கோள் என்று அழைப்பர். ரிஷபம் - துலா ராசிகளுக்கு அதிபதி.

| | | |
|---|---|---|
| திக்கு | - | கிழக்கு |
| அதிதேவதை | - | இந்திராணி |
| பிரத்யதிதேவதை | - | இந்திரமருந்துவன் |
| தலம் | - | ஸ்ரீரங்கம் |
| வாகனம் | - | முதலை |
| தான்யம் | - | மொச்சை |
| மலர் | - | வெண்தாமரை |
| வஸ்திரம் | - | வெள்ளை ஆடை |
| ரத்தினம் | - | வைரம் |
| அன்னம் | - | மொச்சைப் பொடி சாதம் |

*7. சனி*

சங்கடந் தீர்க்கும் சனி பகவானே
மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா!

பலன் : கடன்கள் நீங்கி செல்வம் செழிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*7. சனி*

இவர் சூரியனுடைய குமாரர், பாவபலன் தருவதில் ஈஸ்வரபட்டம் பெற்றவர். சனியைப் போல் கொடுப்பாரும் இல்லை கெடுப்பாரும் இல்லை என்பது பழமொழியாகும். மகரம் - கும்பம் ராசிகளுக்கு அதிபதி.

| | | |
|---|---|---|
| திக்கு | - | மேற்கு |
| அதிதேவதை | - | யமன் |
| பிரத்யதிதேவதை | - | பிரஜாபதி |
| தலம் | - | திருநள்ளாறு |
| நிறம் | - | கருமை |
| வாகனம் | - | காகம் |
| தான்யம் | - | எள் |
| மலர் | - | கருங்குவளை, வள்ளி. |
| வஸ்திரம் | - | கறுப்பு நிற ஆடை |
| ரத்தினம் | - | நீலம் |
| அன்னம் | - | எள்ளுப் பொடி சாதம் |
| தீபம் | - | எள் முடிச்சு தீபம். |

*8.ராகு*

அரவெனும் இராகு ஐயனே போற்றி
இரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள் புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி!

பலன் : விரோதிகள் அழிந்து எல்லா காரியங்களிலும் வெற்றி கிட்டும்.

*8.ராகு*

இவர் அசுரத்தலையும், நாக உடலும் உடையவர். மிக்க வீரம் உடையவர். கருநாகம் என்று அழைக்கப்படுவர்.

| | | |
|---|---|---|
| திக்கு | - | தென்மேற்கு |
| அதிதேவதை | - | பசு |
| பிரத்யதிதேவதை | - | பாம்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலம் | - | காளத்தி |
| நிறம் | - | கருமை |
| வாகனம் | - | நீல சிம்மம் |
| தான்யம் | - | உளுந்து |
| மலர் | - | மந்தாரை |
| வஸ்திரம் | - | கறுப்பு நிற ஆடை |
| ரத்தினம் | - | கோமேதகம் |
| அன்னம் | - | உளுந்துப்பருப்பு பொடி சாதம் |

*9. கேது*

கேதுத் தேவ் கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே தேண்மையாய் ரக்ஷி!

பலன் : எல்லாத் துன்பங்களும் நீங்கி சுகவாழ்வு வாழலாம்.

*9. கேது*

இவர் நாகத்தலையும், அசுர உடலையும் உடையவர்,

| | | |
|---|---|---|
| திக்கு | - | வடமேற்கு |
| அதிதேவதை | - | சித்ரகுப்தன் |
| பிரத்யதிதேவதை | - | பிரமன் |
| தலம் | - | காளத்தி |
| நிறம் | - | செம்மை |
| வாகனம் | - | கழுகு |
| தான்யம் | - | கொள்ளு |
| மலர் | - | செகவல்லி |
| வஸ்திரம் | - | பல நிற ஆடை |
| ரத்தினம் | - | வைடூரியம் |
| அன்னம் | - | கொள்ளுப்பொடி சாதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயகலைகள்!

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல் வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்!

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடெம்மைச்
சரியாசனம் வைத்த தாய்!

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைப் போல் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமரகுருபரர் அருளிய

# சகலகலாவல்லி மாலை

**உள்ளக்கமலத்தில் உறைய வேண்டுதல்**

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

**நாற்கவி பாட நல்லருள் தருவாய்**

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

**கலைமகள் அருளிற் குளிக்க விரும்புதல்**

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்**

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

**நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்**

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

**பண்ணும் பரதமும் நல்கிட வேண்டுதல்**

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

**பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்**

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்**

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

**சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்**

சொற்கும் பொருட்கு முயிராமெஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

**மன்னர் தன்னையும் பணியச் செய்வாய்**

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்ப்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதியான வாழ்வு பெற சொல்ல வேண்டிய பதிகம்

துஞ்சலும் துஞ்சல் இல்லாத போழ்திலும்
நெஞ்சகம் நைந்து நினைமின், நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த, வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சு எழுத்துமே. 01

மந்திரம் நான்மறை ஆகி, வானவர்
சிந்தையுள் நின்று, அவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்சு எழுத்துமே. 02

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண்சுடர்
ஞான விளக்கினை ஊற்றி, நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு, இடர்
ஆனகெடுப்பன, அஞ்சு எழுத்துமே. 03

நல்லவர் தீயர் எனாது, நச்சினார்
செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போம் இடத்து
அல்லல் கெடுப்பன அஞ்சு எழுத்துமே. 04

கொங்கு அலர் வன்மதன் வாளிஐந்து அகத்து
அங்குள்ள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கு அரவின் படம் அஞ்சும் தம் உழை
அங்கையில் ஐவிரல் அஞ்சு எழுத்துமே 05

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்சு எழுத்துமே. 06

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்சு எழுத்துமே 07

வண்டு அமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணக் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்சு எழுத்துமே. 08

கார்வணன், நான்முகன் காணுதற்கு ஓணாச்
சீர்வணச்சேவடி செல்வி, நாள்தொறும்
பேர்வணம் பேசிப்பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன, அஞ்சு எழுத்துமே. 09

புத்தர், சமண் கழுக்கையர், பொய்கொளச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறு அணிவார் வினைப்பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்சு எழுததுமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்தன், நால்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றம் இல் மாலை ஈர்ஐந்தும் அஞ்சு எழுத்தும்
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே. 11

## தினம் தீபம் ஏற்றும் போது சொல்ல வேண்டிய பாடல்

சோதியே! சுடரே! சூழ் ஒளி விளக்கே! சுரிகுழல், பனை முலைமடந்தை
பாதியே! பரனே! பால் கொள்வெண் நீற்றாய் பங்கயத்து அயனும், மால் அறியா
நீதியே! செல்வத் திருப்பெருந்துறையில் நிறைமலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால் அதெந்துவே? என்று அருளாயே!

## உணவு வேளையில் நினைக்க வேண்டிய பதிகம்

அன்னம்பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்குமாறு கண்டின்புற
இன்னம்பாலிக்குமோ இப்பிறவியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாட்சரத்தின் மகிமை

மானிடப்பிறவி எடுத்த நாம் முன் செய்த தீவினையின் பயனை அனுபவிக்குங்கால் துன்பப்படுகின்றோம். துன்பம் தொடர்ந்தும் வருமோ என்று அச்சமுறுகின்றோம். எங்கும் நீக்கமற நிற்கின்ற சிவபெருமானே அவ் அச்சத்தைத் தீர்க்கக்கூடியவர்.ஒரு கால் நினைக்கின்ற இருகாலும் தோன்றும் கருணையுடையவர். ஆகையால் அவருடைய திருநாமமாகிய திருவைந்தெழுத்தை ஓதித்துன்பத்தை நீக்கி உய்தி பெறலாம். ஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய நமச்சிவாயத் திருப்பதிகம் சிவனுடைய திருநாமம் நமசிவாயத் திருப்பதிகம் சிவனுடைய திருநாமம் நமசிவாய எனக் கூறுகிறது.

"காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார் தமை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"

என்பது அந்தத் திருப்பதிகத்தின் முதற்பாட்டாகும். அவ்விதமே ஒவ்வொரு பாட்டும், நாம் ஓத வேண்டிய நாமம் நமசிவாய எனக் கூறுகின்றது. நாவுக்கரசு "படைக்கலமாக உன் நாமத் தெழுத்தஞ்சென் நாவிற் கொண்டேன் என்றும் சுந்தரமூர்த்திநாயனார் நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே, என்றும் மணிவாசகப் பெருமான் நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க, என்று கூறுவதிலிருந்தும் திருவைந்தெழுத்தே இறைவனுடைய நாமம் என்று அறிகின்றோம்.

தந்தையானவன், தன்னுடைய பிள்ளைகள் "அப்பா" என்று அழைக்கின்ற பொழுதெல்லாம் அவர்கள் வேண்டியவற்றை மன அன்போடு கொடுப்பதுமல்லாமல் அவர்களுக்கு நேரிடும் துன்பத்தை எந்நேரத்திலும் துடைப்பதற்கு ஆயத்தமாய் இருக்கின்றான். அது போன்று எல்லா உயிர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையப்பராகிய சிவபெருமான் தனது நாமத்தைச் சொல்லி அழைக்கும் எவ்வுயிர்க்கும் கருணை கூர்ந்து வேண்டுவதை நல்கச் சித்தமாயிருகின்றேன். ஆகையால் இத்திருவைந்தெழுத்தின் மகிமை யாதென நாம் சிந்திக்க வேண்டும்.

ஆன்மாக்களுக்கு மலம் நீங்கும் பொருட்டுப்பிறப்பினைக் கொடுத்துத் தொழிற்படுத்துவது நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தாகும். இங்கு ந என்பது திரோதான (மறைப்பு) சக்தியையும், ம என்பது அருட்சக்தி (திருவருள்) யையும், ய என்பது ஆன்மாவையும் குறிக்கும். இங்கு திருவருட் சக்தியானது திரோதான சக்தியாக நின்று மலமானது உயிரை நீங்கும் பொருட்டு அம்மலத்தைத் தொழிற்படுத்தும் மறைத்தல் வினைப் போகங் களிலே அழுந்தச் செய்தலாம். அருளல் உயிர்களுக்கு மலத்தை நீக்கி சிவத்துவத்தை அளித்தலாம். அழித்தல் ஆன்மாக்களின் இளைப்பை ஒழித்தற் பொருட்டாம். ஆன்மாக்களைத் துன்பத்திற்கு காரணமான ஜெனன மரண சாகரத்தினின்றும் எடுத்து அருள்புரிதல் காரணமாகவே இறைவன் ஐந்தொழிலைப் புரிகின்றார்.

ஸ்ரீ பஞ்சாட்சரமே திருமூல மந்திரமாகும். பஞ்சாட்சரத்தைக் குருவினிடமே பெற்றுக் கொள்ள வேண்டும். அவ் விதம் குருவினிடம் சிவ தீட்சை பெற்றோர் 108 அல்லது 50 அல்லது 25 அல்லது 10 உருவாயினும் நியமமாகத் தினமும் குருவை வழிபட்டுச் செபித்தல் வேண்டும். ஆன்மாக்களுக்கு ஒவ்வொரு பிறவியிலும் இவ்வுலக இன்பத்தை நல்கக் கூடியதும் துன்பத்தை விளைவிக்கும் ஜெனன மரண சாகரத்தினின்றும் காப்பாற்றக் கூடியதும் திருமூல மந்திரமாகும். நினைப்பவனைக் காப்பதே மந்திரம் நல்கும் பலனாகும்.

"கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாட்சரத்தை ஓதுவோர் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகளை இத்தேவாரம் விளங்குகின்றது. தீட்சை பெற்றதும் உடனடியாக மலநோய் முற்றாக நீங்கி விடாது. அது சிறிது சிறிதாகக் குறைந்து அகலும், பசி நோய், உணவினாலும், உடல் நோய் மருந்தினாலும், அறியாமை கல்வியினாலும் நீங்கும். அது போன்று மலநோயானது பஞ்சாட்சரத்தை தினமும் ஓதுவதனால் சிறிது சிறிதாகத் தேய்ந்து உய்தி அளிக்கும்.

பஞ்சாட்சரம் ஒருவரின் பக்குவநிலைக்கேற்ற வண்ணம், தூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம், மகாமனு என ஐந்து வகையாய் விளங்கும். அதை உச்சரிக்கும் முறை(1) மானதம் (2) மந்தம்(3) உரை என மூவகைப்படும். மானதம் என்பது மனதினாலே உச்சரித்தலாம். தன் செவிக்கு மாத்திரம் கேட்டத்தக்கதாக உச்சரித்தல் மந்தம் எனப்படும். இது உபாஞ்சு என்றுங் கூறப்படும். உரை என்பது பிறர் செவிக்குக் கேட்கத் தக்கதாகச் செபித்தலாம். இது வாசகம் எனவும் கூறப்படும். இவைகளுள் மானதம் மிகவும் சிறந்த முறையாகும். மானதம் கோடி மடங்குபலமும் மந்தம் பதினாயிரம் மடங்கு பலமும், உரை நூறு மடங்கு பலமும் தரும்.

இனி, தூலபஞ்சாட்சரத்தைப் பற்றி அறிதல் வேண்டும். பஞ்சாட்சரத்தை உச்சரிப்பதால் அஞ்ஞானம் நீங்கி ஞானம் பிரகாசிக்கும், மந்திரங்கள் எல்லாவற்றிலும் பஞ்சாட்சர மந்திரம் சிறந்தது. "மந்திரம் நமச்சிவாய வாக நீறணியப் பெற்றால்" என்று நாவுக்கரசு கூறியுள்ளார்.

"நந்தி நாமம் நமச்சிவாய வெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தை பயன் மகிழ்ந் தேத்தவல் லாரெ ரல்லதம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஞானசம்பந்தர் நமச்சிவாயப் பதிகத்தின் ஈற்றில் உயிர்களைப் பந்தித்த பாசம் நமசிவாய என்னும் சிவபெருமானுடைய திருநாமத்தை ஓதுவதனால் நீங்குமெனக் கூறுகின்றார். தூல பஞ்சாட்சரத்தைப் பற்றி திருமூலர்,

"ஒன்றுகண் டேனிவ் வுலகுக் கொருகனி
நன்றுகண் டாயது நமச்சிவாயக் கனி
மென்று கண்டாலது மெத்தென்றிருக்கும்
தின்றுகண் டாலது தித்திக்குந் தானன்றே"

என்று கூறுவது நோக்கற்பாலது உலகத்தோர்க்குப் பயன்படக்கூடிய நல்ல கனி ஒன்று உண்டு. அக்கனியின் திருப்பெயர் "நமசிவாய" என்பதாம். அக்கினியின் உணர்வின் கண் விளங்கி மெல்லுதலைச் செய்தால் அது மென்மையாக அமைந்திருக்கும். அழுந்தி அறிதலாகிய உண்பதனைச் செய்வோர்க்குத் தெவிட்டாத இனிப்பாய்க் காணப்படும். இவ்வாறு இறைவனுடைய திருநாமத்தின் சிறப்பு எடுத்து ஓதப்படுகிறது.

உயிர்கள் திருவடிப் பேறாகிய கனியைத் தேடி உள்ளங்கனிந்து ஓயாது திரியும் அங்ஙனம் திரியும் போது மாயா காரியங்களிலே சிக்கிக் கொள்கின்றன. விட்டில் பூச்சி விளக்கின் ஒளியைக் கண்டு மருட்சி அடைந்து பின்னர் மாண்டு போகின்றன. அதே போல உலகப் பற்றாகிய கைவிளக்கை ஏற்றி மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் அவ்வுயிரைத் தம் வழிக்கு இழுக்கின்றன. ஆகையால் இறைவன் திருநாமம் ஒன்றே அவ்விடர்ப் பாட்டின்று நீக்க வல்லது. நம முதலாக ஓதுவது தூல பஞ்சாட்சரமாகும். அது நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம் உயிர்ப்படங்கல் ஆகிய ஐந்து நிலைகளையும் ஆக்குவிக்கும். நம என்பதை உயிர் நோக்க ஊன நடனமாகும். உயிர் பாசத்தோடு கூடுவதனால் படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு என்னும் நான்கு தொழில்களிலும் அகப்பட்டு அதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு இறப்பு நிகழும். உயிர் சிவத்தை நோக்க சிவத்தின் ஞான நடனமாகும். அது அனுக்கிரகத்தை அருளும். அதனாற் பேரின்பப் பெருவாழ்வு உண்டாகும். இது பற்றி

"ஊன நடனம் ஒரு பால் ஒருபாலாம்
ஞான நடனம் தான் நடுவே நாடு"

என்று திருவருட் பயன் கூறுகின்றது. சிவயநம என்பதில் உயிராகிய யகரம் நடுவே நிற்பதைக் காணலாம். சிவாயநம என ஓதினால் பிறப்பு நீங்கிச் சிவத்தினைச் சார்ந்து மேல் நிலை எய்தும் பேறு கிட்டும். இதனாலன்றே மணிவாசகர்,

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாய்இன் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"

என்று கூறுவதிலிருந்து முன் செய்த தவத்தின் பயனாலேயே குருவிகிடமிருந்து சிவாயநம என்ற உபதேசத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறிகின்றோம்.

"நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத் தஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்றாடல் உள்ளபடி - பெற்றிடநான்"

என்று உண்மை விளக்கம் கூறுவதைக் கவனிக்கலாம். சீலம் நோன்பு, செறிவு (சரியை, கிரியை, யோகம்) என்னும் சிவ புண்ணியங்களைச் செய்தோர் நற்றவம் செய்தவராவர். சிவாயநம என்று ஓதுதலே முதற்படியாகும். இது சீலத்தார்க்குரியதாகும். சிவாயசிவ என்பது அறிவினர்க்கும் (ஞானநிலையினர்) உரியதாகும். நமசிவாய என்பது நலம் அருளும் பொதுவாகும். நகரமும் மகரமும் முதற்கண் நிற்பது பிறப்பியல்பாகிய உலக நடைமுறையைக் குறிக்கின்றது. இது போகங்களைக் கொடுப்பது.

சிவ முதலாக உச்சரித்தால் ஜெனன மரண துன்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கும் "உன தருளால் திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்" என்று நாவுக்கரசர் கூறுவது நோக்கற்பாலது. சிவாயநம என்பது சூக்கும பஞ்சாட்சரம் அல்லது முத்தி பஞ்சாட்சரம் எனப்படும். விடய போகங்களில் வெறுப்பும் முத்தியின்பத்தில் விருப்பமுமுடையவருக்கு இப்பஞ்சாட்சரத்தை உபயோகிக்கலாம்.

"சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம் இது நீ ஓதும் படி"

என்று திருவருட்பயன் கூறுகிறது. சிகரமும் வகரமும் முதற் கண் நிற்பது சிறப்பியல்பாகிய திருவடிப்பேற்றினைக் குறிப்பதாகும். திரோதானசக்தியாகிய நகரமும் அதனாற் செலுத்தப்படும் மகரமும் நீங்கினவிடத்து சிவயசிவ என அமையும்.

"சிவனரு ளாய சிவன்திரு நாமஞ்
சிவனருளான் மாத் திரோத மலமாயை
சிவன் முதலாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே"

என்று திருமந்திரம் கூறுகின்றது. சிவாயநம என்னும் திருவவைந்தெழுத்து சிவபெருமானின் திருமேனியாகும். அத்திருவைந்தெழுத்து முறை "சிவன் அருள் ஆன்மா, திரோதம் மலமாயை என்பனவாகும். இவ்வைந்து சொற்களின் முதலெழுத்துக்களே திருவைந்தெழுத்தாகும். சிவாயநம என அன்புடன் தினமும் ஓதி நற்றவம் புரிதல் வேண்டும். அவ்விதத் தவத்தின் பயனால் மலமாயை கன்மங்கள் அகன்று அடங்கும். அவை அடங்கவே பிறப்பறும் பிறப்பறவே திருவடிப் பேறு பெற்று அவ்வுயிர் சிவனாகி மீளா அடிமையாய் விடும். சிவாயநம என நோன்பு (கிரியை) நெறியில் நிற்போர் மேற்கொள்வதாகும். சூக்கும பஞ்சாட்சரத்தைச் செபித்தலினால் ஆணவமலம் பரிபாகம் எய்தி நீங்கும். அப் பொழுது இதுவரையும் மலபரிபாகம் வரும்வரையும் உலக போகங்களிற் செலுத்திய திரோதான சக்தி அருட்சக்தியாய் மாறி ஆன்மாவிற் பதியும் பின்னர் ஞானசாரியாரிள உபதேசம் கிடைக்கும். அவை காரண பஞ்சாட்சாரம்(சிவாயசிவ), மகாகாரண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாட்சரம் (சிவசிவ), மகாமனு (சி) என்பனவாகும். சிவஞான போதம் ஒன்பதாம் சூத்திரம் ஞானசாரியாரின் உபதேசம் பெற்றோர் அச்செழுத்து ஓதுதலின் அவசியத்தை விளக்குகின்றது.

"ஊனக்கண் பாச முணராய் பதியை
ஞானக்கண்ணிற் சிந்தை நாடி
யுராத்துணைத் தேர்ந்தெனப் பாசமொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே"

கருவி கரணங்களின் உதவியைக் கொண்டு அறியும் பாச அறிவாலும் துணையின்றியறிய இயலாத குறையினையுடைய பசு (ஆன்மா) அறிவாலும் பதியை அறியமுடியாது. அவ்விருவழிகளாலும் அறிய முடியாத முதல்வனைத் திருவடி ஞானத்தால் உயிராகிய தன்னறிவின் கண் ஆய்ந்து அறியவேண்டும். அவ்விதம் அறிவதோடு நில தத்துவம் முதலாக நாததத்துவம் ஈறாகிய பாசக்கூட்டம் கானல் நீர் போன்றதென்று நீங்கி அப்பாசக்கூட்டத்தினின்று நீங்க வேண்டும். அத்திருவடி ஞானமாகிய பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய்த் தோன்றும். பாசத்தினின்று திருவடி ஞானத்தினால் முதல்வனைக்கண்ட காட்சி நிலைத்தற் பொருட்டு திருவைந்தெழுத்தை விதிப்படி செபித்தல் வேண்டும். இதுவே இதன் பொருளாகும். பிரபஞ்சப் பொருட்களை அசத்து என்று கண்டு அவைகளை நீக்கிய பின்னர் ஞானம் உண்டாகி அந்த ஞானக் கண்ணுக்குப் பதி விளங்கித் தோன்றியவிடத்தும் பழக்க வசத்தால் அவ்வுயிர்கள் பிரபஞ்ச உணர்வை நோக்கி நிற்கும். அப்பழைய வாசனையை நீக்குதற் பொருட்டு ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உச்சரிக்க வேண்டியது அவசியமாகும்.

சூக்கும பஞ்சாட்சரமாகிய சிவாயநம என்ற மறை மொழியை அன்புடன் ஓதி வருவதனால் மலமாயை கன் மங்கள் அகன்று விடும். அவ்விதம் திரோதான சத்தியாகிய நகரமும் அதனாற் செலுத்தப்படும் மகரமும் நீங்க சிவாய சிவ என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். இதனிற் சிகரவகரங்கள் இருபக்கத்திலுமிருக்க யகரம் நடுவே காணப்படுகின்றது. இது காரண பஞ்சாட்சரம் அல்லது அதிசூக்கும பஞ்சாட்சரம் எனப்படும். இது செறிவினர் ஓதும் முறையாகும். சிவாயசிவ என ஓதும் நற்றவம் கைகூட அருவினை அகலும். அருட்சத்தியாகிய வகரத்திற்கும் சிறப்பாகிய சிகரத்திற்கும் நடுவே உயிர்கள் நிற்கின்றன. இறைவனை அடையும் அடையும் உயிர்களினின்று மாயையும் பாசமும் விலகி நிற்கும் என்பதை நாம் அறியலாம்.

பின்னர் யகரம் வசமாகிய அருளிலே சேர்ந்து நிற்க அருளும் சிவமுமாகிய இரண்டும் மாத்திரம் விளங்கும், இதுவே சிவசிவ என்னும் மகாகாரண பஞ்சாட்டசரம் எனப்படும். இதை ஓதுவதனால் அடங்கா மனமும் ஒடுங்கா உயிர்ப்பும் அடங்கி ஒடுங்கும். இது அறிவு நெறியினர்க்காகும் திருமந்திரம்.

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவார்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

திருவருளின் துணையால் "சிவசிவ" என்று ஓதாதவர்கள் தீவினையாளர்களாவர். அப்பிழையை உணர்ந்து அதனை ஓதினால் தீவினை மாளும். இடையூறாது ஓதுவதனால் தேவராவர். சிவ சிவ என்று மேலும் ஓதினால் சிவநிலை எய்தித்திருவடி இன்பத்தை அநுபவிப்பார். சிவகதி எய்துவதற்கு நாவுக்கரசர் கூறுவதையும் இன்று நாம் சிந்திக்க வேண்டும்.

"கேடு மூடிக் கிடந்துண்ணும் நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளிலி யீசனை
பாடு மின்இர வோடு பகலுமே"

"சிவ சிவ என்று எப்பொழுதும் ஓதுவதனால் திருமறைகளை எந்நேரமும் பாடுதலானும் சிவகதியை எய்த வழியுண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகாரண பஞ்சாட்சரமாகிய "சிவ" என்பதில் வகரமாகிய அருளையும் சிகரம் தன்னுள் அடக்கிக் கொண்டு சிகரமாகிய எழுத்து மாத்திரமே தனித்து "சி" என நிற்பதே மகாமனு எனப்படும். இது இறை எழுத்து எனவும், பெருவெழுத்து எனவும், நாயோட்டு மந்திரம், பீரமபீசம் எனவும் கூறப்படும். இந்நிலையயை விளக்கும் பட்டினத்தடிகள் திருப்பாட்டையும் நினைவிற்கூற வேண்டும்.

"மாயநட் டோரையும் மாயா மலமெனும் மாதரையும்
வியவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந் தாயுடன்
சென்று பின் தாதயைக் கூடிப்பின் தாயைமறந்
தேயும தேநிட்டை யென்று னெழிற்கச்சி யேகம்பனே"

இங்கு யகரமாகிய ஆன்மாவுக்கு நகாரமாகிய திரோதான சத்தி நண்பனாகவும், மகரமாகிய மலம் மனைவியாகவும், வகரமாகிய அருட்சத்தி தாயாகவும், சிகரமாகிய சிவன் தந்தையாகவும் கூறப்பட்டுள்ளது. நகார, மகாரங்களின்று நீங்கி அருள் வெளியே நின்று திருவருளாகிய தாயின் கிருபையைப் பெற்று நிட்டைகூடிப் பேரின்பத்தை அநுபவித்து அதனையுங் கடந்து வகாரமேயாய் பின்னர் அதனையும் மறந்து சிகாரமாய் நிற்கும் நிலையை இத்திருப்பாடல் விளக்குகின்றது.

பஞ்சாட்சரம் ஓதுவதனால் உண்டாகும் பயனை "உண்மை விளக்கம்" தெளிவாக விபரிக்கிறது.

"அண்ணல் முதலா அழகார் எழுத்தைந்தும்
எண்ணில் இராப்பகலற் றின்பத்தே - நண்ணி
அருளா னதுசிவத்தே யாக்கும் அணுவை
இருளா னதுதீர இன்று."

சிவமுதலாகச் சொல்லும் அழகு பொருந்திய பஞ்சாட் சரத்தையும் இடையறாது தியானித்தால் அருளானது பொருந்தி ஆன்மாவை கேவல, சகலங்கள் நீங்கிய நிலையில் ஆனந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவத்தை யுடைய சிவத்தின்கண்ணே சேர்க்கும்:

இனி ஐந்தெழுத்தினால் அர்ச்சிக்க ஏற்படும் பலனைத் திருக்களிற்றுப்படியார் கூறுவதைக் கவனிக்கலாம்.

"அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆறாக பெற்றறிந்தே - அஞ்செழுத்தை
ஓதப்புக் குள்ள மதியுங் கெடிலுமைகோன்
கேதமற வந்தனிக்குங் கேள்"

பஞ்சாட்சரமே சத்தியையும் சிவனையும் காட்டுகிற படியினாலே அதைப் பேரின்பத்துக்கு வழியென நினைந்து அசை வற்றுத் தியானத்திலிருந்து பஞ்சாட்சரத்தைச் செபிக்க ஆன்மபோதங் கெடும். பின்னர் சிவனுடைய கிருபை கிட்டும். இதுவே இதன் பொருளாகும்.

இனி முத்திப் பஞ்சாக்கரத்தினால் அர்ச்சிக்கும் முறையை அறிதல் வேண்டும். புறம்பே ஞானபூசை செய்வதற்குப் பூசைத் தானம், ஓமத்தானம், தியானத்தானம் வகுத்துக் கொண்டு பஞ்சாக்கரத்தினாலே அர்ச்சனை செய்தல்போல உடம்பினுள்ளே இதயத்தைப் பூசைத்தானமாகவும், உந்தியை ஓமத்தானமாகவும், புருவ நடுவைத் தியானத்தான மாகவும் கருதிக்கொண்டு பூசைத் தானமாகிய இதயத் தாமரையில் முத்திப் பஞ்சாட்சரத்தைத் திருமேனியாகவுடைய சிவபெருமான் வீற்றிருப்பதாகப் பாவித்து அர்ச்சிக்கவேண்டும். அர்ச்சிப்பதுபோல கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் எட்டுப் புட்பங்களைக் கொண்டு அர்ச்சித்தல் வேண்டும்.

புறத்தே ஒரு விடயத்திற் சென்று பற்றுவதாகிய தன்னறிவை அவ்விதம் செல்லாதடக்கி அகத்தே ஒரு குறியின் கண் நிறுத்தி நிட்டைகூடி நிற்கும் முறைமையை ஐந்தெழுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுமுறையில் வைத்துக்கொண்டு சிந்திக்கச் சிந்திக்க, சிவதரிசனத்தை விளக்கிவிடும். ஆதலால் அது சிறந்த சாதனமாகும். காணப்படாத பதிப்பொருளாகிய முதல்வனைத் தன் இதயத்தின்கண் ஐந்தெழுத்து ஓதுமுறையாற் காணலாம். ஒரு கோலை நட்டுக் கயிற்றினாற் சுற்றிக் கடையவே காட்டகத் தினின்றும் தோன்றும் நெருப்புப் போன்று அம்முதல்வன் அப்பொழுது தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கி நிற்பன். இதை விளக்கும் நாவுக்கரசர் தேவாரம்.

"விறகிற் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே"

என்று கூறுகின்றது. ஒரு விறகு கட்டையுள் நெருப்பு மறைந்து இருப்பதுபோல, பாலில் நெய் மறைந்து இருத்தல்போல, இரத்தினக் கல்லின் ஒளிபோல் சோதியுருவமாய்

விளங்குகின்ற கடவுள் உயிர்ப்பொருள் உயிரில்லாத பொருள்யாவற்றிலுமிருந்து ஊனக் கண்ணாற் பார்ப்பவர்களுக்குத் தோன்றாது மறைந்து நிற்கின்றான்.

ஒரு விறகு கட்டையை ஒரு கோலிற் கயிற்றைச் சுற்றிக் கடையும்பொழுது அதிற் தீ வெளிப்படுதல் போலவும், பாலை, மத்திற் கயிற்றைச் சுற்றிக் கடையும்போது நெய் வெளிப்படுதல் போலவும் மனிதர் தங்களுடைய உண்மையான அன்பைக் கடவுளிடத்து தங்களுடைய அறிவு கடந்து செலுத்தினால் அவர்களுடைய உண்மை அறிவுக் கண்ணுக்கு (ஞானக் கண்ணுக்கு) வெளிப்பட்டுக் கடவுள் நிற்பன்.

இதயத்துள் முப்பத்தாறு தத்துவங்களையும் ஆசனமாகக் கொண்டு அவற்றின்மேல் நிற்கும் இறைவனுடைய திருபஞ்சாட்சரத்தாற் பூசை செய்யவேண்டும். 36 தத்துவங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு ஆசனமாக அமைந்தன என்பதை அறிய வேண்டும். பூதம் 5, தன்மாத்திரைகள் 5, ஞானேந்திரியம் 5. கன்மேந்திரியம் 5, அந்தக்கரணம் 4 ஆகிய 24 தத்துவங்களும் உந்தியில் நின்று தோன்றிய எட்டு விரல் அகல அளவு நீளமாயுள்ள தண்டு வடிவாம். வித்தியா தத்துவம் ஏழும் சிவதத்துவத்திலுள்ள சுத்தவித்தை ஒன்றும் ஆக எட்டுத் தத்துவமும் அத்தண்டின்மேல் உள்ள எட்டு இதழ் வடிவாம். ஈசுரம், சதாசிவம் என்னும் இரண்டும் அவ்விதழுக் குள்ளாகிய 64 பூந்தாது வடிவம். சிவதத்துவம் அவ்வித்தினுட் காணப்படும் 51 பீச வடிவாம். அத்தன்மையாகிய இதய தாமரையில் 36 தத்துவங்கயையும் ஆசனமாகக் கொண்டு சிவசக்தி வீற்றிருக்குமாதலால் அச்சத்தியையுடைய சிவபெரு மானை முத்திப் பஞ்சாட்சரத்தால் அர்ச்சிக்க வேண்டும். அண்ட வடிவாகிய 36 தத்துவங்களுக்கும் மேம்பட்டு வியாபகமாய் விளங்கும் முதல்வனை அவ்விதய கமலத்தின் மேலாகக் கண்டு பூசித்தல் வேண்டும். பஞ்சாட்சரத்தை எவ்விதம் விதிப்படி உச்சரிப்ப தென்பதைக் "கொடிக்கவி" யில் கூறப்பட்டுள்ளது.

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி."

இங்கு அஞ்செழுத்தென்பது "சிவாயநம" என்பதாம். ஓம், ஆம், ஔம், சிவாயநம என்பது எட்டெழுத்தெனப்படும். "ஓம் நமசிவாய" என்பது ஆறெழுத்தாகும். "ஓம் சிவாய" என்பது நாலெழுத்தாகும இவ்விதம் விதிப்படி உச்சரிக்கிற முறைமையை விட்டு பஞ்சாட்சரத்தினுடைய சொரூபத்தை (சி.சிவன், வ-சத்தி, ய-ஆன்மா, ந-திரோதம், ம - மலம் )அறிந்து பிஞ்செழுத்தாகிய வகாரத்தையும் (பராசத்தி) பெருவெழுத்தாகிய சிகரத்தையும் (சிவம்) இரண்டற அழுத்துவிக்கும். பிஞ்சுமென்மையைக் குறிக்கிறது, பெரு எழுத்து பெருமை மிக்க எழுத்தென்பதாம் இதுவே இதன் பொருளாகும் பஞ்சாக்கரத்தினாலே மோட்சத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையலாம் என்பது தெளிவு. இருவினையாகிய எஞ்சுவினை (சஞ்சிதம்) ஏறவினை (ஆகாமியர்) ஆகியவைகளினால் ஏற்படும் பாவம் நீங்கிப் பிறப்பறுப்பதற்கு பஞ்சாட்சரத்தை ஓதும் முறையைத் திருமந்திரம் விளக்குகிறது.

"நமவென்னு நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவமென்னு நாமத்தைச் சிந்தையு ளேற்றப்
பவமது தீரும் பரிசும தற்றால்
அவமதி தீரும் அறும்பிறப் பன்றோ"

சிவாயநம என்ற சூக்கும பஞ்சாட்சரத்தை ஓதும்போது சிவ என்னும் இரண்டு எழுத்தினையும் சிந்தையினுள்ளே அழுத்தமாகப் பதித்தல்வேண்டும். ய என்னும் எழுத்தை மிடற்றில் நிறுத்துதல் நம என்னும் இரண்டு எழுத்தினையும் நாவின்கண் அடங்கி ஒடுங்குமாறு ஒடுக்குதல் வேண்டும். இதுவெ ஓதும் முறை யாகும். இவ்விதம் ஓதிவர இருவினைப்பாவம் அணுகாது. அதனால் அறியாமை இருளும் தீரும் அறியாமை நீங்கப் பிறப்பறும். பிறப்பற பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்கும். அண்டபிண்டம் முதலிய தத்துவங்களின் ஓயா இயக்கமே இறைவனின் திருகூத்தாகும். யான் எனது என்னும் செருக்கற்றவர்களே அதனை அறியமுடியும். தரிசித்தவர்களுக்குச் செனன மரணம் இல்லை.

"ஓங்கார மேநல் லதிருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்
அற்றார் அறிவர் அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின"

என்று உண்மை விளக்கம் கூறுவதை ஆராயவேண்டும். ஓங்காரம் என்று சொல்லப்படும் பிரணவம் திருவாசியாகவும் அப் பிரணவத்தைவிட்டு நீங்காத பஞ்சாக்கரமே நிறைந்த உள்ளொளி யாகவும் இருப்பதை யான் எனது என்னும் உரைமாய்த்தோர் அறிவர். திரு அம்பலத்தான் செய்யும் ஆடலைக் காணவல்லார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனடியைச் சேர்ந்தவராவர். அகர உகர மகரமும் விந்து நாதமும் ஆகிய ஐந்தும் கூடியநிலை ஓங்காரம் திருவாசி எனப்படும். திருவாசி திருப்பிழம்பைச் சூழ்ந்து காணப்படும், வனப்பமை வளைவு. இவ் வனப்பமை வளைவினுள் ஒளிவிட்டுக் கொண்டு திகழும் திருவைந்தெழுத்து அவ்வோங்காரத்திற்கு உயிராகும்.

சிகரத்தை முதலாகக் கொண்ட பஞ்சாட்சரமே திருமேனியாகக்கொண்டு ஆன்மாக்கள் பிறவியை நீக்கும் பொருட்டு ஆன்மாவிடத்திலே பரமசிவன் நடனஞ் செய்கின்றான்.

"எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சால
அவாயமற நின்றாடு வான"

என்று உண்மை விளக்கம் கூறும் வெண்பா ஆராய வேண்டியதொன்றாகும், தமிழில் அ எட்டு என்ற எண்ணைக் குறிக் கும். உ இரண்டைக் குறிக்கும் எண். எட்டையும் இரண்டையும் கூட்டிய இலக்கம் பத்தாகும். ய பத்தைக் குறிக்கும் எண்ணாகும். ய ஆன்மாவைக் குறிப்பதால் பரமசிவன் ஆருயிர்களில் தங்கி நின்றே நடனத்தைச் செய்கின்றான் என்பது தெளிவாகிறது. மனமணி லிங்கமாக" என அப்பருடைய தேவாரத்திலும் கூறப்படுவதைக் கவனிக்கலாம். இறைவனுடைய திருக்கூத்து திருவைந்தெழுத்தின் உருவமாகும். திருவைந்தெழுத்தும் அம்பலக்கூத்தன் ஆடும். திருமேனியிற் பொருந்தும் நிலைகளும் விரித்தோதப்படுகின்றன.

"ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாதத்தில் நகரமாகவும் திருவுந்தியில் மகரமாகவும் திருத்தோள் சிகரமாகவும் திருமுகம் வகரமாகவும் திருமுடியகரமாவும் கொண்டு முதல்வன் திருநடனஞ் செய்கின்றான். இவ்விதம் பொருந்தி இருப்பது ஒரு வடிவம். இது இலயாங்கம் என்னும் திருவுருவப்பிழம்பு ஆகும். இதினின்று அவயவங்களும் தொழில்களும் பிரிந்து கூடும்போது வருவது போகாங்கமாகிய வடிவம். அது சிகர முதலாகவரும் பஞ்சாட்சரத்தைப் பொருந்தி இருப்பதாம், அது ஐந்தொழில் புரியும் முறையாம்.

"சேர்க்கும் துடிசிகரஞ் சிற்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்"

ஒலிக்கின்ற துடி(உடுக்கு)யை ஏந்திய கையிலே சிகரமும் நன்றாக வீசிய கையில் வகாரமாகும். அமைத்த கையிலேயகரமாகவும் அக்கினி ஏந்திய கையிலே நகரமாகவும், முயலகனை மிதித்த பாதத்திலே மகரமாகவும் கொண்டு திரு நிருத்தத்தைச் சிவன் புரிகின்றார். இங்கு திருவுருவின் வலப்பாகம் சிவனாகவும் இடப்பகுதி சத்தியாகவும் உருவகிக்கப்படும். வலப்பால் அறிவையும் இடப்பால் ஆற்றலையும் குறிக்கும். திருவடியில் நகரம். முன்னர் கூறிய திருப்பாட்டில் நகரம் ஊன்றிய திருவடியின் மேற்பகுதியையும் இத் திருப்பாட்டில், அத்திருவடியின் கீழ்ப்பகுதியைக் குறிக்கிறது. வலப்பகுதி சிறப்பியல்பையும் இடப்பால் பிறப்பியல்பையுங் குறிக்கும். வலப்பகுதியின் திருக்கையில் சிகரமும் அதனை அடுத்தது யகரமுமாகும். இது திருவருளினால் ஒப்பு விப்பதாம். நகரம் ஊன்றிய வலது திருவடியின் மேல் அமையுங்காலத்து மலமாயா கன்மங்களைக் குறிக்கும். மகரம் திருவயிற்றின் கண் அமைகிறது. வயிறு உயிர்கள் பிறப்பெடுப்பதற்குரிய உடம்பமைக்கும் நிலைக்களம். ஆகையால் இது பிறப்பியல்பினைக் குறிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமுடைய ஆருயிர்கள் தரிசிக்கத்தக்கதாக நாதமுடியிலே பஞ்சாட்சரமே திருமேனியாகக் கொண்ட திருநடனத்தின் காரணமும் பயனும் யாவையென அறிதல்வேண்டும். அண்டபிண்டங்களின் தோற்றம், நிலைபேறு ஒடுக்கம் ஆகிய மூன்றினோடு உயிர்களின் மறைப்பும், அருளலும் ஆகிய இரண்டும் சேர்ந்த ஐந்தொழில்களே அத்திருக்கூத்து உணர்த்துவதாகும். இந்த உண்மையை விளக்குவதே சிவ பெருமானின் திருவுருவ அமைப்பாகும். இதைப்பற்றி உண்மைவிளக்கம்

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்று விளக்குகின்றது திருக்கைகள் மூன்றினாலும் முத்தொழில்களும் குறிக்கப்பட்டன. திருவடி இரண்டினாலும் மறைப்பும் அருளலும் குறிக்கப்பட்டன. உடுக்கு ஏந்திய கையில் மல சங்காரமும், ஊன்றிய பாதத்தில் பிரபஞ்சத்தை மறைக்கும் திரோதமும் தூக்கிய திருவடியில் அநுக்கிரகமும், ஆகியன குறிக்கப்படுகின்றன. நாத தத்துவமே உலகதோற்றம். நெருப்பு சங்காரத்தைக் குறிக்கிறது. வீடு பேற்றின் காரணமாக நடைபெறும் மறைப்பு உலகப்பொருள்களேயாகும். உயிர்களுக்கு பொருள்களைக் காணுவதற்கு முன் ஏற்படாத விருப்பம் கண்டதும் தோன்றுகின்றன. நாதம் முப்பத்தாறாவது மெய்யாகும். அம்முப்பத்தாறு மெய்யும் கடந்த அப்பாலுள்ள திருவருட் பெருவெளியே பரமேஸ்வரன் திருநடனஞ் செய்யும் இடம். ஞானிகள் முதல்வனுடைய கிருபையினால் மூன்று மலங்களையும் நீக்கி ஆன்ம போதம் முடிந்தவிடத்திலே உதயமாகும் ஆனந்த வெள்ளத்தை அருந்த அனுபவிப்பதுதான் திருஅம்பலத்தாள் திருநடனத்தின் முறைமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரன் அருளிய வேதம், ஆகமங்களும் புராணங்கள் அனைத்தும் ஆனந்த நடனமும் தத்துவ ஆதீதமாகிய மௌனமாயிருக்கும் பரமுத்தியும், பஞ்சாட்சரம் என்பதையும் அறியவேண்டும். ஒருவர் அறிந்து உய்யவேண்டி ஒழுகும் வழிகளை குறிப்பன திருமாமறை எனக் கூறப்படும் வேதசிவாகமங்களாகும், இந்நூல்கள் திருவருளால் மெய்யடியார்கள் மூலம் உலகத்துக்குக் கிடைப்பனவாகும். இவ்வகையில் வழிபாட்டு நூல், வழிபாட்டமைப்பு நூல், வண்ணமைப்பொருள் நூல் வாழ்க்கைநூல் என்ற நூல்களை நாம் கைக்கொள்ளலாம். மேற்கூறப்பட்ட முதல் மூன்று வகை நூல்களும் வகரத்துள் அடங்கும். அவைகள் சிவாகமங்கள் எனப்படும் திருமுறைகளாம். இவைகளுள் நால்வர் தந்த தேவார திருவாசகம் வழிபாட்டு நூலாகும். திருமூலர் அருளிய திருமந்திரம் வழிபாட்டமைப்பு நூலாகும். மெய்கண்ட சாத்திரங்கள் வண்மைப்பொருள் நூல்களாகும். நான்காவதாகச் சொல்லப்படும் வாழ்க்கை நூல் திருவள்ளுவ நாயனாரார் அருளிய செந்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறளாகும். "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன்நாமும் நமச்சிவாயவே" என்ற திரமறைத் திருவருவாக்குக்கிணங்க திருவைந் தெழுத்தினுள் அடங்காதன யாவும் இல்லையென்பதை அறியலாம். இறைவன் திருவடியை எய்துதற்கும் திருவைந் தெழுத்தே துணையாகும்.

"ஓசை தரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க
உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊகமெலாம் ஓட.."

என்று சித்தியார் கூறுவதைச் சிந்தித்துத் திருவைந் தெழுத்தை ஓதிப் பிறவிப்பிணியை நீக்கி உய்திபெற நாம் முயல வேண்டும்.

(முப்பொருள் உண்மை விளக்கத்திலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”

03.01.2022 அன்று இறையடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் தம்பு திரவியம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரடியாகவும் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் கூறியோர்க்கும் இறுதி யாத்திரையில் கலந்து மயானம் வரை ஆறுதல் கூறியோர்க்கும் தொல்லியல் திணைக்களத்தினைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கும், நவக்கிரி சித்த மருத்துவ மத்திய நிலைய வைத்தியர், ஊழியர்களுக்கும், அயலவர்கள், உறவினர்கள் வர்த்தர்கள் நண்பர்கள் ஆகியோருக்கும் எமது அழைப்பை ஏற்று மதிய போசனத்தில் கலந்து கொண்டேர்க்கும் இம் மலரினை அச்சிட்டுத் தந்த மதிபதிப்பகத்தினருக்கும் எமது உளம் நிறைந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி

❊ தம்பு + ❊ அம்மாக்குட்டி

- ❊ செல்லத்துரை
- ❊ புலேந்திரன்
- ❊ இராஜதுரை
- ❊ கந்தசாமி
- ❊ ஈஸ்வரபாதம்
- பரமேஸ்வரி
- இரத்தினம்மா
- **திரவியம்**
- சுந்தரலிங்கம்

❊ நடராசா + ❊ முத்துமணி

உதயலோஜினி

**திரவியம்** + உதயலோஜினி

நிவேந்தன் + வாரணி

- பரணிகா
- அஸ்விதன்

தாரணி + வசந்தரூபன்

- கபினேகா
- வருணிகா
- தரங்கினி

❊ அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கை"

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!

பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!

வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
"அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்" எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
"அனுபவம் என்பதே நான்தான்" என்றான்!

கவிஞர் கண்ணதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MATHI COLOURS